மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள -

# ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, விவசாயத் தோழர்களுக்காக உழைத்த பெ.சண்முகத்திற்கு - எனது மனமார்ந்த பாராட்டுதல்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை.ஜன.6-**

**“மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள தோழர் பெ.சண்முகம் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்கள்” என்று, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு :-

“மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய தமிழ் மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கும் தோழர் பெ.சண்முகம் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் விவசாயத் தோழர்களுக்காகவும் உழைத்த அவருக்கு கடந்த ஆண்டு அண்ணல் அம்பேத்கர் விருதை கழக அரசு வழங்கியது. அத்தகைய சிறப்புக்குரிய தோழர் சண்முகம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற சக்திகளின் ஒருங்கிணைப்புக்கும், கழகக் கூட்டணியின் அனைத்து வெற்றிகளுக்கும் எந்நாளும் உழைத்த தோழர் கே. பாலகிருஷ்ணன் அவர்களின் பணிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலச் செயலாளர் பொறுப்பில் இருந்து விடை பெற்றிருந்தாலும் மக்கள் பணிக்கு விடைகொடுக்காமல் நாளும் உழைப்பவர் தோழர் கே.பாலகிருஷ்ணன் அவர்கள் என்பதை நாடறியும்.

இரு தோழர்களும் தங்கள் பணியைத் தொய்வின்றித் தொடர வாழ்த்துகிறேன்.”

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## திருக்குறளுக்கு உரை எழுதத் தொடங்கி விட்டேன்!

# பழைய தலைமுறை மதிக்க வேண்டும்! இளைய தலைமுறை துய்க்க வேண்டும்!

## கவிப்பேரரசு வைரமுத்து பெருமிதம்!



திருக்குறளுக்கு
உரை எழுதப்போகிறேன் என்று
கன்னியாகுமரியில் அறிவித்தேன்

உரை எழுதத் தொடங்கிவிட்டேன்

உரை செய்யப் புகுமுன்னால்
சில உரைநெறிகளை
உருவாக்கிக் கொண்டிருக்கிறேன்

திருக்குறளின் மூலத்திற்கும்
திருவள்ளுவர் காலத்திற்கும்
மெய்யோடிருத்தல் வேண்டும்

அறத்துப்பாலும் பொருட்பாலும்
அறிவுப் பொருளாகத் திகழ வேண்டும்;
காமத்துப்பால்
கவிதைப் பொருளாக விளங்க வேண்டும்

மூலத்தின் அறிவும் செறிவும் விரிவும்
உரையிலும் ஓசை நயத்தோடு
துலங்கவேண்டும்

எவ்வளவு இயலுமோ அவ்வளவு
தனித்தமிழே ஆளப்பெறுதல் வேண்டும்

**பழைய தலைமுறை மதிக்க வேண்டும்;
இளைய தலைமுறை துய்க்க வேண்டும்
தமிழ் அருள் புரியும்**

---

### திருச்சி மாவட்டம் – சமயபுரம்

# அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

## நாய்க்கடி தடுப்பூசி போட்டு காப்பாற்றப்பட்ட சிறுவனின் குடும்பத்தினர் – முதல்வருக்கு நன்றி!

திருச்சி, ஜன.6

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.01.2025) திருச்சி மாவட்டம், சமயபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அங்குள்ள செவிலியர்களிடம் அம்மருத்துவமனையில் உள்ள வசதிகள், தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

மேலும் அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் விசாரித்தபோது, ஒரு சிறுவன் நாய்க்கடியினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற வந்துள்ளான். அவனுக்கு உடனடியாக சமயபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ARV என்று சொல்லக்கூடிய நாய்க்கடிக்கான தடுப்பூசி செலுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோர்கள் அமைச்சர் அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கப்பட்டமைக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், 07.05.2021 இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகுதான் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் ASV, ARV என்று சொல்லக்கூடிய பாம்புக்கடி மற்றும் நாய்க்கடிகளுக்கான தடுப்பூசிகள் கையிருப்பில் வைக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சைகள் உடனடியாக வழங்கப்படுகிறது.

கடந்த கால ஆட்சிக்காலத்தில் பாம்புக்கடி, நாய்க்கடி போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகுபவர்களுக்கு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கும், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் அழைத்துச் சென்றுதான் சிகிச்சைகள் வழங்க முடியும். இந்தநிலை தற்போது மாறியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சைகள் வழங்க ஏதுவாக இந்த ஆட்சி மருத்துவத்துறையை கட்டமைத்துள்ளதற்காக பாதிக்கப்பட்டுள்ள சிறுவனின் பெற்றோர் முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருக்கும் நன்றியினைத் தெரிவித்தார்கள்.

